பக்கங்கள் 17+7

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 17 திங்கட்கிழமை 02.09.2024 | அதிர்வு 32

## தமிழ் இளைஞர் ஒருவர் மீது இராணுவம் வெறியாட்டம்!

### 8 சிப்பாய்கள் கைது

(ராமு தனராஜ்)

பண்டாரவளை, ரயில் நிலையத்தில் தமிழ் இளைஞர் ஒருவரைத் தாக்கிக் குழப்பத்தில் ஈடுபட்டனர் 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ஓடி ஒளிந்த சஜித்தால் நாட்டை ஆள முடியாது!

### பரப்புரைக் கூட்டத்தில் ரணில் தெரிவிப்பு

"பிரதமர் பதவியை ஏற்று என்னுடன் இணைந்து பணியாற்ற வருமாறு சஜித்துக்கு நான் அழைப்பு விடுத்தேன். 05



### ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரிக்கும்

# தமிழரசின் மத்திய குழுவின் தீர்மானத்தை ஒற்றுமையாக நடைமுறைப்படுத்துவோம்!

### யாழில் மாவை இன்று அதிரடி அறிவிப்பு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் நேற்று நிறைவேற்றிய தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம் என்று அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 04




# சந்திரகுமாரும் சஜித்துக்கு ஆதரவு

### கிளிநொச்சியில் இன்று இருவரும் கூட்டாக அறிவிப்பு




சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் இடையே இன்று சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பையடுத்து இது தொடர்பான அறிவிப்பை மேற்படி இருவரும் ஊடகங்கள் முன்னிலையில் அறிவித்தனர்.

1994 - 2000 மற்றும் 2010 - 2015 காலகட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய சந்திரகுமார்,

நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களில் பிரதித் தலைவராகவும் பணியாற்றியிருந்தார்.

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகி சுயேச்சையாக இவர் போட்டியிட்டார்.



# சந்திரகுமாரும் சஜித்துக்கு ஆதரவு





















# தர்மலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் இன்று காலை 7 மணியளவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அன்னதானம் றிச்சாட் தவப்பிரகாசம் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரையாற்றினார்.

இந்த நிகழ்வில் வி.தர்மலிங்கத்தின் மகனும் புளொட் அமைப்பின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இதே நாளிலேயே கோப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.ஆலாலசுந்தரமும் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.























# குதிரை மூலம் ரணிலுக்காக பிரச்சாரம் செய்யும் அதாவுல்லா

(பாறுக் ஷிஹான்)

கொழும்பில் இருந்து இரண்டு உயர்ரக வெள்ளைக் குதிரைகள் தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரதான வீதிகளில் உலா வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டி இடும் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து குறித்த குதிரைகள் தினமும் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன.

ரணில் விக்ரமசிங்கவின் பிரசார கூட்டங்கள் இடம்பெறுகின்ற இடங்களை மையப்படுத்தி இரு குதிரைகளும் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன். வித்தியாசமான முறையில் மக்களிடம் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக பிரசாரம் செய்து வருகின்றன.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்வின் தேசிய காங்கிரஸ் கட்சியின் சின்னம் குதிரை. இம்முறை இடம்பெறும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை அவர் ஆதரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ் இளைஞர்...

எனக் கூறப்படும் 8 இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரயில் நிலைய அதிபரால் பண்டாரவளை பொலிஸாருக்குத் தொலைபேசி ஊடாக வழங்கப்பட்ட தகவலுக்கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு 8.30 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

தியத்தலாவை இராணுவ முகாமியில் சேவையாற்றும் மேற்படி இராணுவச் சிப்பாய்கள், விடுமுறையில் வீடு செல்லும் வழியிலேயே இவ்வாறு ஒழுக்கமற்ற விதத்தில் செயற்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் பண்டாரவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. ரயில் நிலைய அலுவலகக் கடமையின் நிமித்தம் ரயில் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அவ்வேளையில் ரயிலில் இருந்து இறங்கியுள்ள மேற்படி இராணுவச் சிப்பாய்கள், பாடல் பாடியுள்ளதுடன், கூச்சல் சத்தமும் எழுப்பியுள்ளனர். இதன்போது நிலத்தில் வீழ்ந்திருந்த பணப் பையை அவர்களிடம் ஒப்படைப்பதற்குத் தமிழ் இளைஞர் ஒருவர் சென்றுள்ளார்.

இதன்போது அந்தத் தமிழ் இளைஞர் பணம் களவாடியுள்ளார் என்று கூறி அவர் மீது இராணுவச் சிப்பாய்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ரயில் நிலைய அதிபரும், அங்கிருந்தவர்களும் தாக்குதலைத் தடுக்கச் சென்ற வேளை, அவர்கள் மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டு, அடாவடியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் பண்டாரவளை ரயில் நிலைய அதிபர் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஆகியோரால் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் பண்டாரவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

### தமிழரசின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சுகவீனம் காரணமாக நேற்றைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ள முடியவில்லை.

ஆனாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழு நேற்று எடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கல், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரனை ஆதரிப்பதில்லை, எமது கட்சி உறுப்பினராகிய அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து உடனடியாக விலக வேண்டும் ஆகிய மூன்று தீர்மானங்களையும் ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம்.” – என்றார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று வெளியாகியுள்ள தகவல், கட்சியின் முடிவல்ல என்றும், இது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு என்றும் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணிலின் சில்லறைச் சொகுசுகளால் சமூகங்களின் பிரச்சினைகள் தீரா!

## ஆறு தடவைகள் பிரதமராக இருந்தும் செல்லாக்காசானவர் என்று தலைவர் ரிஷாத் விளாசல்



அதிகாரப் பகிர்வு, சமூகங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆட்சியைக் கைப்பற்றிய அடுத்த கணமே வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்,

மன்னாரில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளித்த அவர் தெரிவித்ததாவது:-

"சிறுபான்மைச் சமூகங்களின் அமோக ஆதரவுடன் சஜித் பிரேமதாஸவை வெல்ல வைக்க வேண்டும். மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள சகல சமூகங்களதும் தெரிவாக சஜித் பிரேமதாஸ இருப்பார்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் நாளாந்த தொழிலாளர்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அயல்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களால் அதிகம் பாதிக்கப்படுவது மன்னார் மாவட்டமே. இது குறித்து, எமது வேட்பாளர் சஜித்திடம் விளக்கியுள்ளோம். அவரது ஆட்சியில் இதற்குத் தீர்வு கிடைக்கும்.

3ஆம் திகதி (நாளை) காலையில் வவுனியா மாவட்டத்துக்கும், மாலையில் மன்னார் மாவட்டத்துக்கும் சஜித் பிரேமதாஸ வரவுள்ளார். அணிதிரண்டு அவரை ஆதரிக்க வாருங்கள்.

ஆறு தடவைகள் பிரதமராக இருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. எமது மக்களின் பிரச்சினைகள் எவற்றையும் அவர் தீர்க்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளைத் தந்திரமாக இழுத்தடித்தார்.

சமூகப் பிரச்சினைகளைச் சில்லறைக்காசுச் சொகுசுகளால் தீர்க்கவே முடியாது. வாக்குகளில்லாத சிலர் அவரவர் வாய்ப்புகளுக்காகவே ரணிலை ஆதரிக்கின்றனர். விரட்டியடிக்கப்பட்ட கோட்டாவின் எஞ்சிய கால ஆட்சியை, எச்சில் ஆசைகளுக்காகப் பயன்படுத்துவோரை ஆட்சியிலிருந்து விரட்டுவோம்.

பரந்தும் விரிந்தும் கிடக்கும் வடக்கு மாகாண பூமியில், சுற்றுலாத் தளங்களை உருவாக்கி, வாழ்வாதரத்தைப் பலப்படுத்த சஜித் பிரேமதாஸவைப் பலப்படுத்துங்கள்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### ஓடி ஒளிந்த...

ஆனால், டலஸைப் போட்டிக்கு நிறுத்தி அந்த வாய்ப்பையும் சஜித் ஏற்கவில்லை. ஓடி ஒளிந்த சஜித்தால் இந்த நாட்டை ஆள முடியாது." – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிலாபத்தில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"ஆட்சியமைக்க அழைப்பு விடுத்தும் முதல் தடவையாகவே எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் அதனை நிராகரித்தார். இது கின்னஸ் சாதனையாகும். போராட்டத்தின்போது நாடாளுமன்றத்தைக் கைப்பற்ற ஆர்ப்பாட்டக்காரக்கள் முயன்றபோது அங்கிருந்த அனைவரும் வெளியேறினார்கள். இன்று தலைமைத்துவம் கோரும் அனைவரும் பயந்து ஓடினார்கள்.

நான் நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்காவிட்டால் பங்களாதேஷத்தைப் போன்று எம்.பிக்கள் கொல்லப்படும் நிலை ஏற்பட்டிருக்கும். பிரதமர் பதவியை ஏற்று என்னுடன் இணைந்து பணியாற்ற வருமாறு சஜித்துக்கு நான் அழைப்பு விடுத்தேன். ஆனால், டலஸைப் போட்டிக்கு நிறுத்தி அந்த வாய்ப்பையும் சஜித் ஏற்கவில்லை. ஓடி ஒளிந்த சஜித்தால் இந்த நாட்டை ஆள முடியாது.

என்னை ரணில் – ராஜபக்ஷ என்று விமர்சித்தார்கள். இன்று அந்த ராஜபக்ஷக்கள் விலகிச் சென்றுள்ளனர்.

பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்துள்ளோம். உலக நாடுகளினதும் அமைப்புகளினதும் ஆதரவு கிடைத்தது. பொருளாதாரத்தை முன்னேற்ற முடிந்துள்ளது. அரச ஊழியர்களின் சம்பளத்தைப் போன்றே ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவும் அதிகரிக்கப்படுகின்றது.

பங்களாதேஷில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டும் தேர்தல் நடத்த முடியாத நிலை உள்ளது. எம்.பிக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சபாநாயகரைக் காணவில்லை. பிரதம நீதியரசர் துரத்தப்பட்டுள்ளார். ஆனால், நாம் நிலைமையைச் சீராக்கி தேர்தல் நடத்துகின்றோம். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியாலே அதனைச் செய்ய முடிந்தது.

மக்கள் ஆணையைப் பெற்று நாம் ஆரம்பித்த திட்டங்களை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றேன். மக்களுக்கு வாழ்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பொருளாதாரம் எனும் வீடு உடைந்தது. அதனைக் கட்டியெழுப்பி வருகின்றோம். எனது 5 அம்சத் திட்டத்தை 5 வருட இக்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

மாதம்பே முதலீட்டு வலயத்தை உருவாக்க இருக்கின்றோம். சிலாபம் துறைமுகத்தைப் பிரதான மீன்பிடித் துறைமுகமாக அபிவிருத்தி செய்வோம். மீனவர்களின் உற்பத்திகளை கட்டுநாயக்கவுக்கு அனுப்பலாம். கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபத்துடன் இணைக்க இருக்கின்றோம். கற்பிட்டியில் துறைமுகம் ஒன்றை உருவாக்கவும் சுற்றுலா வலயம் ஒன்றையும் அமைக்கவும் இருக்கின்றோம். இரணவிலயிலும் சுற்றுலா வலயம் ஏற்படுத்தப்படும். சகல தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்று இந்தத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது அணியினர் பிரிந்து சிலர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியினால் வெல்ல முடியாது. சஜித்துக்கு வழங்கும் வாக்கு அநுரவுக்கு வழங்கும் வாக்குகளைப் போன்றதாகும். எனவே, ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து வெற்றிக்காகச் செயற்பட வேண்டும்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிறப்பு வீதம் வீழ்ச்சி

இலங்கையில் குழந்தை பிறப்பு வீதம் கடந்த ஐந்து வருடங்களாக கணிசமான அளவில் குறைவடைந்துள்ளதாக புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

2019ஆம் ஆண்டில் பதிவான குழந்தை பிறப்பு எண்ணிக்கையை விட 2023ஆம் ஆண்டில் பதிவான குழந்தை பிறப்பு எண்ணிக்கை 70,000ஆல் குறைவடைந்துள்ளதாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பிரிவின் அறிக்கைகள் கூறுகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

ஒரு காலகட்டத்தில் ஜனத்தொகைப் பெருக்க வீதம் எக்கச்சக்கமாகி நெருக்கடி ஏற்படலாம் என்று அஞ்சப்பட்டது. அதனால் முன்னெச்சரிக்கையாக குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரங்களும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முழு மூச்சில் முன்னெடுக்கப்பட்டன. அவை, முழு நாட்டினதும் ஜனத் தொகைப் பெருக்க வீதத்தைக் கட்டுப்படுத்தும் இலக்கோடு முன்னெடுக்கப்பட்டன.

ஆயினும், இப்போதும் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரங்களும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் அவை தனிக் குடும்பங்களின் நலன், அதன் அங்கத்தவர்களின் நலன், பாதுகாப்பு ஆகியவற்றை இலக்காக வைத்து முன்னெடுக்கப்படுகின்றன.

நாடளாவிய ரீதியில் குழந்தை பிறப்பு வீதம் குறையும் நிலைமை முதற்கட்டமாக முன்பள்ளிகளை மூடும் நிலை வரையில் மாறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக, எதிர்வரும் சில வருடங்களுக்குள் பாடசாலைகளுக்குள் பிள்ளைகளை உள்வாங்கும் நிலையும் குறைவடைந்து, குறைவான பிள்ளைகள் உள்ள பாடசாலைகளை மூடும் நிலை ஏற்படலாம் எனக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாட்டில் குழந்தைப் பிறப்புகள் குறைவடைந்துள்ளமையினால் முதலாம் தரத்திற்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 50,000 ஆல் குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் தற்சமயம், குழந்தை பிறப்புகள் குறைந்துள்ளதால், முதலாம் தரத்தில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்ததன் பின்னர் 290,000 பிள்ளைகள் தற்போது பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்பு, 340,000 குழந்தைகள் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சகத்திடம் இருந்து கிடைத்த தரவுகளின் அடிப்படையில் இலங்கையில் குழந்தை பிறப்பு வீதம் குறைந்துள்ளது" - என்றார் சுசில் பிரேமஜயந்த.

இலங்கையில் 2019 மற்றும் 2022 க்கு இடையில் வருடாந்த பிறப்பு வீதத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டிலிருந்து பிறப்பு வீதங்கள் தொடர்ச்சியாகக் குறைந்துள்ள போதிலும், 2019 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

2023 ஜூலை 01 நிலைவரப்படி மொத்தம் 268,920 பிறப்புகள் பதிவாகியுள்ளன, 2022 இல் மொத்தம் 275,321 பிறப்புகள் பதிவாகியுள்ளன என மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதாவது அந்த ஒரு வருட காலத்துக்குள் சுமார் 6,400 மனிதப் பிறப்புகள் குறைந்துள்ளன.

பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள், பிறப்புக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள், உலகளாவிய தொற்றுநோய்கள் போன்ற காரணங்களால் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது, எதிர்காலத்தில் பெரும் தேசியப் பிரச்சினையாக மாறக் கூடிய சாத்தியங்கள் உள்ளன.

# கல்முனை ஸாஹிரா கல்லூரியில் ஒன்றுகூடலும் பரிசளிப்பு விழாவும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் இந்த வருடம் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களின் ஒன்றுகூடலும், பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் கூட்ட மண்டத்தில் இடம்பெற்றது.

பகுதித் தலைவர் ரீ.கே.எம்.சாகிரின் நெறிப்படுத்தலில் கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகவும், கல்முனை வலய பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் மற்றும் சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் அஸ்மா அப்துல் மலீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே.சனூஸ் காரியப்டர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

மாணவர்களால் மேடையேற்றப்பட்ட கலை கலாச்சார நிகழ்வுகள் பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றன.









# கைதடி வளர்மதியின் ஆண்டு நிறைவை முன்னிட்டுக் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(த.சுபேசன்)

தென்மராட்சி, கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்ட நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் இறுதிப் போட்டிகள் வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் செ.மதனரூபன் தலைமையில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களினுடைய பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்திருந்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வளர்மதி சனசமூக நிலையத்தின் சுவிஸ் கிளைத் தலைவர் சி.கனகலிங்கம், வளர்மதி மாதர் சங்கத் தலைவி திருமதி லகிதா, சுவிஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி ம.கவிதா, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி அருந்தவராணி மற்றும் ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த ச.துஷியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கைதடி மத்தி ஆவரம்பள்ளத்தைச் சேர்ந்த அமரர்களான சின்னத்தம்பி சொர்ணம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களுடைய மகன் சி.இரவீந்திரனுடைய நிதிப் பங்களிப்பில் இடம்பெற்ற போட்டி இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியிருந்த நிலையில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றிபெற்றது.







# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பொலிஸாருக்குத் தெளிவூட்டல்

(பழுவூரான்)

ஜனாதிபதித் தேர்தலில் கடமையில் ஈடுபடவுள்ள பொலிஸ் உயரதிகாரிகளைத் தெளிவூட்டும் செயலமர்வொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற பொலிஸ் உயரதிகாரிகளைத் தெளிவூட்டும் செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியானின் ஒழுங்குபடுத்தலில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.



இதன்போது மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலகர்களான திருமதி நவரூபரஞ்ஜனி முகுந்தன், என்.ஜெகன்நாத் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடயங்கள் தொடர்பாக வும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாகத் தெளிவூட்டப்பட்டது.

இதன் நிறைவில் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கும் தேர்தல்கள் சட்டம் தொடர்பாக விரிவாகத் தெளிவூட்டப்பட்டது.





# திருமலை - அநுராதபுர சந்தியில் ரணிலை ஆதரித்து அலுவலகம்

(ஏ.எச்.ஹஸ்பர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து திருகோணமலை – அநுராதபுர சந்தியில் அலுவலகம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரளவின் பங்கேற்புடன் இது திறக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சன்திப் சமரசிங்க கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த முறை ஜனாதிபதி தேர்தலில் சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களித்து ரணில் விக்கிரமசிங்கவை ஆதரவளிப்பதாக திருகோணமலை மாவட்ட ஹோட்டல் அமைப்பின் தலைவர் குமார் ஜெயக்குமாரன் இதன்போது ஊடகங்களுக்கு தெரிவித்தார்.



# தகுதியான ஒரு வரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டியது அவசியம்

## மன்னாரில் ரிஷாட் பதியுதீன்.எம்.பி.



**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

கோட்டபாய ராஜபக்ஷவின் மோசமான ஆட்சியின் போது ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் இந்த நாடும் மாவட்டமும் பாதிக்கப்பட்டது.

நாட்டை முழுமையாக மீட்டெடுக்கவும், மன்னார் மாவட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் மக்கள் தகுதியான ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் பள்ளிமுனை வீதியில் கட்சியின் தேர்தல் அலுவலகம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டதுபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளார். மன்னார் மாவட்ட மக்கள் ஒன்று பட்டு அவரை வெற்றி பெறச் செய்ய இருக்கிறார்கள்.

அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்ற இந்த மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸவின் வருகையை எதிர்பார்த்துள்ளனர்.

இந்த மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக மீனவ சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர். விவசாயிகளுக்கும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

கோட்டபாய ராஜபக்ஷவின் மோசமான ஆட்சியின் போது ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் இந்த மாவட்டமும் பாதிக்கப்பட்டது.

இந்த மாவட்டத்தில் இருக்கும் பாதிப்புக்களில் இருந்து இந்த மாவட்டத்தை மீட்டெடுப்பதற்காகவும், இந்தியாவுக்கு அருகில் இந்த மாவட்டம் இருக்கின்றமையால் இந்தியாவுக்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைத்தல், கப்பல் சேவையை ஆரம்பித்தல், சுற்றுலாத் துறையை மேம்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து நாங்கள் சஜித்பிரேமதாஸாவுடன் பேசி உள்ளோம்.

அவர் மன்னார் வருகின்ற போது அவர் மக்களுக்கு குறித்த விடயங்கள் பற்றித் தெளிவாகத் தெரியப்படுத்துவார்.

அவரின் வெற்றிக்கு பின்னர் என்ன சொல்கிறாரோ அதை செய்ய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி அவருடன் இணைந்து செயற்படும்.

எமது கட்சி மாத்திரம் இல்லாது இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், மனோ கணேசன் எம்.பி., திகாம்பரம் எம்.பி. போன்றவர்களின் கட்சிகள் உற்பட எத்தனையோ கட்சிகள் சஜித் பிரேமதாஷவின் பின்னால் அவரின் வெற்றிக்காகப் பாடுபடுகின்றன.

நாடு முழுவதும் அவருடைய வெற்றிக்காக மக்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அனைத்து இன மக்களின் வாக்குகளுடனும் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவார். விவசாயிகள், மன்னார் மீனவர்களின் பிரச்சினை, வன வள திணைக்களத்தின் கீழ் அபகரிக்கப் பட்டுள்ள காணிகள் உள்ளிட்ட 10 விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

எனவே அவர் மீது எங்களுக்கு பூரண நம்பிக்கை உள்ளது. அவர் பல விடயங்களை கேட்டுச் செய்யக் கூடியவர். எனவே அவரை வெற்றி பெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற முடியாத நிலை அரிய நோந்திரனுக்கு ஏற்பட்டுள்ளது. அவரை கொண்டு வந்து தமிழ் பொது வேட்பாளராகக் களமிறக்கி உள்ளனர்.

இந்த நிலையில் அவர்களுக்குள் ஒருவர் ரணிலுடன் பேசுகின்றார். மேலும் ஒருவர் சஜித்துடன் பேசுகின்றார். இதன் அர்த்தம் என்ன என்று தெரிய வில்லை.

எனவே தமிழ் மக்கள் ஏமாந்து விடக்கூடாது. மிகவும் நொந்து போன ஒரு சமூகமே எம் தமிழ் சமூகம். இன்று உரிமைகளைப் பற்றிப் பேசுகின்றவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆனால் இன்று மீனவர்களும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மக்கள் பலர் யுத்தத்தால் அவயங்களை இழந்து வாழ்ந்து வருகின்றனர். எனவே மக்களாகிய நீங்கள் இந்த நாட்டுக்குத் தகுதியான ஜனாதிபதி யார் என்பதை தெரிவு செய்ய வேண்டும்.

அவரால் எமது பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்குமா என்பதை உணர்ந்து சஜித் பிரேமதாஸ அவர்களை அமோக வாக்குகளால் வெற்றி பெறச் செய்யுங்கள்.- என்றார்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சிறுவர் அபிவிருத்தி திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு!

(பழுவூரான்)

சிமிர்னா சிறுவர் அபிவிருத்தி திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு திராய்மடுவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு - திராய்மடு சிமர்னா திருச்சபையின் தலைமை போதகர் வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

மண்முனை வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 10 கிராமங்களை உள்ளடக்கிய வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 5 வயது தொடக்கம் பல்கலைக்கழகம் செல்வோர்வரை அவர்களுயுக்கு உதவிகள் வழங்கி அவர்களின் அறிவாற்றல், சமூக ரீதியான ஆற்றல், உடல் ரீதியான ஆற்றல் மற்றும் ஆன்மீக ரீதியான ஆற்றல் என்பவற்றில் சிறந்தவர்களாக மாற்றும் நோக்கிலேயே இத்திட்டமானது அமையப் பெறவுள்ளது.

இந்தத் திட்டமானது சிறார்களை வறுமையில் இருந்து விடுவிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை சிறப்பம் சமாகும். 146 சிறுவர்கள் இந்தத் திட்டத்தின் ஊடாகத் தேர்ந்தெ டுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காகப் 18 வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கெம்பஸ்ஷன் நிறுவனமானது இத்திட்டத்தின் அனுசரணையாளர்களாக செயற்படுகின்றது.

சிமர்னா திருச்சபையின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தலைமைப் போதகர் எஸ்.ஜே.சில்வெஸ்டார், கெம்பஸ்ஷன் நிறுவனத்தின் பிரதிநிதி கஜாந்தன், தொழில் வழிகாட்டல் ஆலோசகர் ஜெகநாதன், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரி, சுகாதாரப் பணிமனையின் உயரதிகாரிகள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச நாடுகளில் கடனைப் பெற்று நாட்டு வளங்களை விற்பவர் ரணில்!

**ஐக்கிய மக்கள் சக்தியின் திருமலை மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் மஹ்தி**

(ஏ.எச்.ஹஸ்பர்)

சர்வதேச நாடுகளில் கடனைப் பெற்று, நாட்டு வளங்களை அவர்களுக்கு அடாத்தாக விற்பவர் ரணில் விக்கிரமசிங்க.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை இந்த நாட்டை மீட்டு விட்டேன். போர் யுகத்தை நிறுத்திவிட்டேன். பொருள் தட்டுப்பாடுகள் இல்லை. என்கின்ற கானல் நீர் கதைகளை பேசுவதன் மூலம் தானே நிகரில்லா தலைவன் எனும் மாயையை காட்ட முனைகின்றார்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் எம். எம். மஹ்தி தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள கட்சி கிளை அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் சொற்ப நாள்களே இருக்கின்ற இந்த நேரத்தில் யாருக்கு வாக்களிப்பது என்கின்ற தீர்மானத்தை மக்கள் எடுக்கப் போகின்ற இந்த நேரத்திலே ஒரு மும்முனைப் போட்டி இருப்பதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

நிலைமையை சீர் செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் பாகிஸ்தான், பங்களாதேஸ், இந்தியா போன்ற நாடுகளிடமும் அதிக பணத்தை கடனாக பெற்று கடன் சுமையை மேலும் அதிகரித்து சாதித்து இருக்கின்றார்.

கடன் மேல் கடன்படுகின்ற போது அதனை மீளச் செலுத்த முடியாத ஒரு இக்கட்டான நிலை ஏற்படுவதோடு எமக்குச் சொந்தமான அரச நிறுவனங்களைக் காணிகளை வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும்




ஏற்படுகிறது.

இவ்வாறே இலங்கை பெற்றோலியம், ரெலிக்கொம் போன்ற நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு அடாத்தாக வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

இது உண்மையான மாற்றமோ அபிவிருத்தியோ அல்ல. இந்த நாட்டை ஊழல் மோசடிகளால் நாசம் செய்த கொள்ளையர்களையும் இனவாதிகளையும் பாதுகாக்கின்ற ஒரு கூடாரமாகவே ரணிலின் தலைமை காணப்படுகின்றது.

பெரும் பெரும் ஊழல் மோசடிகளால் கொள்ளையடிக்கப்பட்ட மோசடி செய்யப்பட்ட உடைமைகளும் சொத்துக்களும் பணங்களும் மீள நாட்டின் தேசிய வருமானத்தில் இணைக்கப்படுகின்ற போதுதான் உண்மையான அபிவிருத்தியை காண முடியும்.

இதற்கு ரணில் என்னும் தலைமை எந்த வகையிலும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.

அநுரகுமார திசாநாயக்க என்பவர் நன்றாக பேசக் கூடியவர். பேச்சால் மக்களை கவரக்கூடியவர். எதிர்க்கட்சியிலே இருந்து கொண்டு வெறும் வாய் பேச்சால் மட்டும் இளைஞர்களையும் நாட்டு மக்களையும் கவர்ந்து கொண்டிருக்கின்றார்.

அவரால் இதுவரை ஆக்க பூர்வமான எந்த ஒரு வேலைத் திட்டமும் நாட்டுக்கோ மக்களுக்கோ செய்யப்படவில்லை.

தேர்தல் செலவுகளுக்காக வெளிநாட்டு நிதி அனுசரனைகள் கிடைக்கின்றன. பிரச்சாரத்துக்கு அதிக பணத்தை செலவு செய்கின்றார்கள். கூடுதலான விளம்பரங்களை செய்கின்றார்கள். ஆனாலும் கடந்த கால அனுபவங்களை ஒப்பிடுகின்ற போது சனம் திரண்டாலும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்து ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் சஜித் பிரேமதாஸ பாடசாலைகளுக்கு பஸ்களையும் ஸ்மார்ட் வகுப்பறைகளையும், வைத்தியசாலைகளுக்கு உபகரணங்களையும் பல்வேறு இன்னோரென்ன வேலை திட்டங்களை ஆக்க பூர்வமாகச் செய்து வந்திருக்கின்றார்.

எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தை நிர்வகிப்பதற்குச் சிறந்த நிபுணத்துவம் கொண்ட புத்திஜீவிகள் குழு காணப்படுகின்றது. ஆட்சியாளர்களால் கொள்ளையடிக்கப்பட்ட அரச சொத்துக்களை சட்ட நடவடிக்கையின் மூலம் மீட்டெடுப்பேன் எனும் அறைகூவலை சஜித் பிரேமதாஸ முன்மொழிகின்றார்.

எனவே வாக்களிக்கும்போது இந்த நாட்டை மீட்டெடுத்து உற்பத்தியை அதிகரித்து வளமான அபிவிருத்தியையும் நாட்டையும் உண்டாக்குவதற்கு சஜித் பிரேமதாஷவை வெற்றி பெறச் செய்து ஜனாதிபதியாக நிலை நிறுத்த வேண்டும் என மக்களை கேட்டுக்கொள்கிறேன்.

5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தபால் மூல வாக்களிப்பின் போது அரச ஊழியர்களும் அதிகாரிகளும் ஒரு இன, மத, குல பேதங்களுக்கு அப்பால் சிறந்த தலைவனாக மிளிருகின்ற சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க வேண்டும் என கன்னியமாக கேட்டுக் கொள்கின்றேன்.- என்றார்.

# ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவதே காலத்தின் நியதியாகும்

(பாறுக் ஷிஹான் )



ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவதே காலத்தின் நியதியாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட பொத்துவில் தொகுதி இணையமைப்பாளரும் கிழக்கு மாகாண ஐக்கிய மக்கள் சக்தியின் கல்வி அபிவிருத்தி குழு இணைப்பாளருமான வெள்ளையன் வினோகாந் தெரிவித்தார்.

வெல்லும் சஜீத் என்ற தொனிப் பொருளில் எதிர்கால ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக தலைமையில் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகததுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி புதிய வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் உள்ளிட்ட கிராமங்களில் துண்டுப்பிரசுரம் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது அங்கு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியாக ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்துள்ளது. 39 வேட்பாளர்கள் களமிறங்கி இருக்கின்றார்கள். இதில் வெல்லும் வேட்பாளராக சஜித் பிரேமதாஸ இருக்கின்றார். இன்று நாடு முழுவதும் சஜீத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக மக்கள் ஒன்று சேர்ந்துள்ளனர்.

இன்று முதல் கட்டமாக சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, இஸ்மாயில் புரம், உள்ளிட்ட கிராமங்களில் துண்டுப்பிரசுரத்தை உத்தியோக பூர்வமாக விநியோகித்துள்ளோம்.

இதற்கமைய வீடு வீடாகவும் வீதிகளில் பயணம் செய்பவர்களுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் துண்டுப்பிரசுரத்தை விநியோகித்துள்ளோம்.

ஒரு தாய் பிள்ளைகளாக ஒரு நாட்டின் சிங்கள தமிழ் முஸ்லீம்கள் ஒற்றுமையுள்ள மனிதர்களாக இணைந்து சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும். இன்று நாடளாவிய ரீதியாக நாம் பலப்பரீட்சையில் இறங்கி இருக்கின்றோம்.அந்த பரீட்சையில் நாங்கள் வெல்ல வேண்டும்.

எதிர்வரும் 22 திகதி ஜனாதிபதியாக சஜீத் பிரேமதாஷ வருவதை எவராலும் தடுக்க முடியாது .காரணம் இறைவனால் சொல்லப்பட்ட நியதியாக மாறி விட்டது.- என்றார்.








# சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சிவில் பிரஜைகள் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் வி.திருநாவுக்கரசுவின் ஏற்பாட்டில் சிங்கள டிப்ளோமா பாடத்திட்டத்தில் தகைமை பெற்ற 350 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சந்திவெளி நிடிஸ் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணக் கட்டளைத் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.குலதுங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அத்தோடு 23 ஆவது படைப் பிரிவு தளபதிகள், பிரதேச செயலாளர்கள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இதன்போது கல்வி அமைச்சில் இருந்து வருகை தந்த எஸ். ஸ்ரீதரன் "மொழியின் மூலம் ஒற்றுமை" எனும் தொனிப்பொருளில் இளைஞர்களுக்கு மொழியின் முக்கியத்துவம் குறித்து விரிவுரையாற்றினார்.

அத்தோடு விழாவின் முக்கியத்துவம் மற்றும் சமுதாயத்தில் மொழியின் பணி மற்றும் மோதல்களைச் சரியான தொடர்பு மூலம் எவ்வாறு தீர்க்கலாம்? என்பது குறித்து கிழக்குத் தளபதி உரையை நிகழ்த்தினார்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதம செயலாளரும் பயிற்சி ஆலோசகருமான ஹயாது மொஹமட் அன்வர் கிழக்கு கட்டளைத் தளபதியால் பாராட்டப்பட்டார்.

சிங்களம் பேசும் மாணவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் தமிழ் மொழியைக் கற்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கிழக்குப் பாதுகாப்பு படைத் தளபதி கருத்துத் தெரிவித்தார்.





# பாவலர்மணி சரளா விமலராசாவின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீடு!

(நவாஸ் )

சுவிற்சர்லாந்து பாவலர்மணி சரளா விமலராசாவின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா இறைபணிச் செம்மல் த. கைலாயபிள்ளை தலைமையில் அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முன் இந்து இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் கோடீஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்க உட்பட கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





கிழக்கு மாகாண ஆளுநரின் பிரதிநிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபாலரத்தினம் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். ஆளுநரின் ஆசிச் செய்தியையும் வாசித்து வைத்தார். இதன்போது பாட்டரசர் புகழ் கலிவிருத்தம், பனங்காட்டு அந்தாதி, சிந்து பாடுவோம், விருத்தமாயிரம் மரபுக் கவிதை போன்ற நூல்கள் வெளியிடப்பட்டன.

கவிஞர் கனக சூரியம் யோகானந்தம் நூல்களின் அறிமுக உரையும், பாட்டரசர் புகழ் கலிவிருத்தம் சாமஸ்ஸ்ரீ மற்றும் திருகோணமலை வலய உதவி பணிப்பாளர் ஏ. எல். கிதுர் முஹம்மது ஆகியோரால் ஆய்வுரையும் வழங்கப்பட்டது.

இதன்போது நூலாசிரியர் திருமதி சரளா விமலராசாவுக்கு பாசுகவி எனும் பட்டமும் வழங்கி வைக்கப்பட்டது.



# மட்டக்களப்பு - பாலமீன்மடு வேம்படி சித்தி விநாயகர் ஆலய தோரோட்டம்!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற மட்டக்களப்பு - பாலமீன்மடு வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா வெகு விமர்சையாக பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (01) அதிகாலை முதல் விநாயகப் பெரு மானுக்கான விசேட அபிசேக பூஜை மற்றும் வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து பக்தர்கள் புடைசூழ விநாயகப்பெருமான் எழுந்தருளிய காட்சி அடியார்களை பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியது.

கிழக்கில் புகழ்பெற்ற மட்டக்களப்பு பாலமீன்மடு வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் இன்றைய தினம் முதல் தடவையாக இடம்பெற்ற அலங்கரிக்கப்பட்ட சித்திரத்தேரில் வேத மந்திர பாராயணங்களுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க விநாயகப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட தேரில் வலம் வந்தார்.




# இரத்ததானம் வழங்கும் நிகழ்வு

(எம். எப். றிபாஸ்.)

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் பொத்துவில் இரத்ததானம் வழங்குவோர் ஒன்றியமும் இணைந்து இரத்ததான முகாம் ஒன்றை ஆதார வைத்தியசாலையில் ஏற்பாடு செய்திருந்தன.

இரத்தக்கொடை வழங்கி உயிர்களை காப்போம் எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், விஷேட அதிரடிப்படையினர், இளைஞர், யுவதிகள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், சமூக சேவையாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பு புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகராக கலாநிதி அன்டன் ரஞ்சித் ஆண்டகை நியமனம்

(வவுணதீவு)

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகராக கலாநிதி அன்டன் ரஞ்சித் ஆண்டகை இன்று திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த 16 வருடங்களாக குருவாக, உதவி ஆயராக அதனைத் தொடர்ந்து ஆயராக மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கடமையாற்றித் தமது ஓய்வு நிலையைக் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை திருத்தந்தையிடம் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு மறைமாவட்டத்தைப்பரிபாலிப்பதற்காகத் திருத்தந்தையால் கொழும்பு மறை மாவட்டத்தின் துணை ஆயர் கலாநிதி அன்டன் ரஞ்சித் ஆண்டகை மறை மாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக கடந்த 19 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் இன்று திங்கட்கிழமை தமது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளார்.

புதிதாக அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி அன்டன் ரஞ்சித் ஆண்டகை மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் இருந்து ஓய்வு நிலை ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் வரவேற்கப்பட்டார். தொடர்ந்து பாண்டு வாத்திய அணிவகுப்புடன் புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தொடர்ந்து மரியாள் பேராலயத்தில் பதவியேற்பு இடம்பெற்றது. இதனை முன்னிட்டு விசேடதிருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் மட்டக்களப்பு மறை மாவட்டக் குரு முதல்வர் ஜோச் ஜீவராஜ் அடிகளார், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஐஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், 243 ஆவது படைப் பிரிவின் கட்டளை தளபதி பிரிக்கேட் கொமாண்டர் சந்திம குமாரசிங்க, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், விமானப்படை உயரதிகாரிகள், சர்வ மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.









# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழா இன்று கொடியேற்றத்துடன்!

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழா இன்று திங்கட்கிழமை (02) காலை 9.15 மணிக்கு கொடியோற்றத்துடன் ஆரம்பமாகியது.

கொடியேற்ற உற்சவத்ததுக்கான அபிஷேகம் அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமானது. தொடர்ந்து 7.30 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதியுலா வந்து கொடித்தம்பத்துக்கு அருகில் எழுந்தருளி நிற்க கிரியைகளுக்கு மத்தியில் பிரதமகுரு கொடி ஏற்றி வைத்தார்.

அதன் பின்னர் சுவாமி மீண்டும் உள்வீதி வலம் வந்து இருப்பிடத்தை சென்றடைந்தது. கொடியேற்றம் நடைபெற்ற போது கூடியிருந்த பக்தர்கள் மாயவா, கேசவா, நாராயாண, வல்லிபுரநாதா என உணர்வுபூர்வமாக பக்தி கோசம் எழுப்பி பிரார்த்தித்தனர்.

17 தினங்கள் நடைபெறும் மகோற்சவத்தின் முதலாம் திருவிழா தொடக்கம் 6 ஆம் திருவிழா வரை சுவாமி உள்வீதி வலம் வருவார். ஏழாம் திருவிழா தொடக்கம் சுவாமி வெளிவீதி உலா வருவார்.

சிறப்பு திருவிழாவாக 8 ஆம் திருவிழாவன்று குருக்கட்டு விநாயகர் தரிசனமும் 9 ஆம் திருவிழா வெண்ணெய்க் காப்பும் 10 ஆம் திருவிழா துகில் திருவிழாவும் 11 ஆம் திருவிழா பாம்புத் திருவிழாவும் 12 ஆம் திருவிழா ஹம்சன் போர்த்திருவிழாவும் 13 ஆம் திருவிழா வேட்டைத்திருவிழாவும் இடம்பெறும்.

14 ஆம் திருவிழா சப்பறத்திருவிழாவும் 15 ஆம் திருவிழா தேர்த்திருவிழாவும் 16 ஆம் திருவிழா சமுத்திரத் தீர்த்தமும் 17 ஆம் திருவிழா தீர்த்தமும் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடி இறக்கமும் நடைபெறும்.

வடக்கு வீதியில் சுவாமி வெளிவீதி உலாவரும் போது கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி அந்நாள் உற்சவக் கருத்தை சித்தரிக்கும் முறையில் இடம்பெறும். மஹோற்சத்தை முன்னிட்டுப் பருத்தித்துறை, யாழ்ப்பாண ஆகிய இடங்களில் இருந்து விசேட போக்குவரத்துக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தினமும் அன்னதானம் சுற்றாடலில் உள்ள மடங்களில் வழங்கப்படும்.

இந்துக்கள் கலாச்சார கோட்பாடுகளுக்கும் கலாச்சாரத்துக்கு அமைவாக உடைகள் அணிந்து பெறுமதி மிக்க தங்கத்திலான ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து உற்சவங்களில் கலந்து கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபை கேட்டுள்ளது.



# செப்.23 உறுதி!

## த.வெ.க. மாநாடு குறித்து புஸ்ஸி ஆனந்த் தெரிவிப்பு



விக்கிரவாண்டியில் செப்ரெம்பர் 23ஆம் திகதி திட்டமிட்டபடி தமிழக வெற்றிக்கழக மாநாடு நடைபெறும் என்று பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உறுதியளித்துள்ளார்.

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் எனும் அரசியல் கட்சியைத் தொடங்கி, அதற்கான கொடி, பாடல்களை வெளியிட்டதைத் தொடர்ந்து, அந்தக் கட்சியின் மாநாடு மீதான எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கொடிக்கான விளக்கத்தை விரைவில் நடைபெறவுள்ள மாநாட்டில் தெரிவிப்போம், அதுவரை உறுப்பினர்கள் கட்சிக் கொடியை முறையாக அனுமதி பெற்று ஏற்றிக் கொண்டாடுங்கள் என விஜய் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், எதிர்வரும் 23ஆம் திகதி விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடாட்டை நடத்துவதற்கான பாதுகாப்பு மற்றும் அனுமதியை த.வெ.க. கோரியுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மாநாட்டிற்கான அனுமதி கோரி கடந்த 28ஆம் திகதி விழுப்புரம் எஸ்.பி அலுவலகத்தில் மனுக் கொடுத்துள்ளார். புஸ்ஸி ஆனந்த், எஸ்.பி அலுவலகத்தில் மனுக்கொடுக்கச் சென்ற பொழுது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் இல்லை. அதனால் அவருக்கு அடுத்தகட்டமாக உள்ள அதிகாரியிடம் மனுக் கொடுக்கப்பட்டது.


தமிழக வெற்றிக் கழகம் கொடுத்த மனு தொடர்ந்து பரிசீலனையில் உள்ளது என விழுப்புரம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்திருந்தார். அனுமதி வழங்கப்படாமல் இருப்பதால், திட்டமிட்டபடி மாநாடு நடைபெறுமா என சந்தேகம் எழுந்தது.

இதற்கிடையில், த.வெ.க. மாநாட்டுக்கான திகதி மாற்றம் தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், ஜோதிடரை அணுகியுள்ளார் எனவும் மாநாடு ஜனவரிக்கு மாற்றம் செய்யப்படவுள்ளது எனவும் தகவல் வெளியாகியது.

ஒக்டோபர், நவம்பர் மாதங்கள் மழைக்காலம் என்பதால் அந்த மாதங்களில் மாநாடு நடத்துவது உகந்தது அல்ல என விஜய் முடிவு செய்துள்ளார் எனவும், மாநாட்டிற்கான திகதி இந்த மாதத்திற்குள் கிடைக்கவில்லை என்றால் ஜனவரி மாதத்திற்குப் பின்னர் மாநாடு தள்ளிப்போக வாய்ப்பு உள்ளது எனவும் தகவல் வெளியாகியது.

தற்போது, விழுப்புரம் மாவட்ட பொலிஸார் கட்சி பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்துக்கு 21 கேள்விகள் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளனர். தமிழக வெற்றிக்கழக மாநாடு குறித்து 21 கேள்விகளை விக்கிரவாண்டி காவல்துறை கேட்டிருந்த நிலையில் தமிழக வெற்றிக்கழகத்தின் சட்டப்பிரிவு நிர்வாகிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், விக்கிரவாண்டியில் செப்ரெம்பர் 23ஆம் திகதி திட்டமிட்டபடி தமிழக வெற்றிக்கழக மாநாடு நடைபெறும் என்று பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர், கட்சியின் நிர்வாகிகளுக்கு உறுதியளித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.



# பட்டினி!

## நாட்டு மக்களுக்கு வனவிலங்குகளை உணவாக வழங்கும் நாம்பியா அரசு



தென்னாபிரிக்க நாடுகளில் ஒன்றான நாம்பியாவில் கடுமையான வறட்சி நிலவுவதால் மக்களுக்கு உணவளிக்க வனவிலங்குகளைக் கொல்ல அந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது.

கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் இல்லாத அளவுக்கு 2023ஆம் ஆண்டு முதல் கடுமையான வறட்சியால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது நாம்பியா.

இதனால், தென்னாபிரிக்காவில் உள்ள மக்கள் தொகையில் பாதியளவு அதாவது சுமார் 14 இலட்சம் மக்கள் நாம்பியாவில் உள்ளனர்.

இந்நிலையில் வறட்சியால் பசி மற்றும் பட்டினியின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

எனவே, அவர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு காட்டில் உள்ள 723 வனவிலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை உணவாகப் பயன்படுத்த நாம்பியா முடிவெடுத்துள்ளது.

இந்த 723 வனவிலங்குகளில் 300 வரிக்குதிரைகள், 100 காட்டெருமைகள், 50 இம்பாலா மான்கள், 100 எலான்ட் வகை மான்கள், 30 நீர் யானைகள், 83 யானைகள் ஆகியவையும் அடங்குகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே 150 விலங்குகள் கொல்லப்பட்டு அவற்றின்மூலம் 63 தொன் இறைச்சி பெறப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க நாடுகளில் உள்ள உலகின் மிகப்பெரிய ஆப்பிரிக்கச் சவானா யானைகள் அழிந்துவரும் பட்டியலில் உள்ள நிலையில் கடுமையான வறட்சியால், உணவுக்காக யானைகள் கொல்லப்படுவது கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, குடிமக்களுக்காக நாட்டின் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கு தங்களின் அரசியல் அமைப்பில் இடம் உள்ளது என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 07

# கனடா முரசு

திங்கட்கிழமை 02/09/2024

## கியூபெக்கில் நிலநடுக்கம்!

கனடாவின் கியூபெக் மாகாணத்தின் சில நகரங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

4.6 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 02





# ஊடக நிறுவன ஒளிபரப்பு வாகனத்தை எரித்தமையை கண்டிக்கிறது கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

## போலித் தேசியவாதிகளின் அராஜகம் என விமர்சனம்

**SV Med யை நிறுவனத்திற்குச் சொந்தமான ஒளிபரப்பு வாகனத்தை தகனம் செய்த அனுமார்களைக் கடுமையாகக் கண்டிக்கிறோம் என கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:**

SV Media நிறுவனத்தின் ஊடக நிறுவனமான தமிழ் One தொலைக்காட்சியின் ஒளிபரப்பு வாகனம் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை (25.08.2024) காலை நவீன அனுமார்களினால் தகனம் செய்யப்பட்டது.

“இந்த நாசகாரச் செயலின் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பையும் வழங்கிவருவதாக கனடிய தமிழர் பேரவை ஊடக அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது. மேலும் இந்தச் சம்பவம் குறித்து சமூகத்தில் உள்ள பலரும் தம்மோடு தொடர்புகொண்டு தமக்கு நம்பிக்கையளிக்கும் விதத்தில் ஆறுதல் கூறினர் எனவும் தெரிவித்துள்ளது.

**கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**
**Canada Tamil National Alliance**

Registered: OC # 1926238

| Presidet | Secretary | Treasurer |
|---|---|---|
| Mr. V.Thangavelu | Mr. T.Babu Vasanthakumar | Mr. N.Nageswaran |
| 416-281-1165 | 416-998-2284 | 647-609-5392 |
| athangav@sympatico.ca | athavannews@gmail.com | Nada.nages@gmail.com |

இந்த ஆண்டு கனடிய தமிழர் பேரவை நடாத்திய 10 ஆவது தமிழர் தெருவிழா வழக்கம் போல் சீரோடும் சிறப்போடும் நடந்து முடிந்தது. இந்தத் தெருவிழா கனடிய தமிழ்மக்களின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. முக்கியமாக தமிழர்களின் பாரம்பரிய உணவு, உடை அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனால் நூற்றுக்கணக்கான தமிழ் வணிகர்களின் வணிகம் மேம்பட வாய்ப்பு வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டுகள் போலவே இந்த ஆண்டும் இலட்சக்கணக்கான மக்கள் ஓகஸ்ட் 24, 25 இரண்டு நாளும் தெருவிழாவை கண்டுகளிக்க வருகை தந்திருந்தார்கள். சில போலித் தேசியவாதம் பேசும் அமைப்புக்கள் தெருவிழாவை புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்தார்கள். பெரியளவில் பரப்புரை செய்தார்கள். இதில் ஒன்ரோறியோ மாகாண அரசின் துணை அமைச்சரான விஜய் தணிகாசலமும் ஒருவர். இவர் தொலைபேசி அழைப்புகள் மூலம் தெருத் திருவிழாவை புறக்கணிக்குமாறு இரவு பகல் ஓயாது ஒழியாது மக்களை வற்புறுத்தினார்.

ஆனால் எமது மக்கள் 02








## ஊடக நிறுவன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலித் தேசியவாதிகளின் வேண்டுகோளை அலட்சியம் செய்துவிட்டு இலட்சக்கணக்கில் வருகை தந்திருந்தார்கள்.

இந்தப் போலித் தேசியவாதிகள் தமிழ்மக்களின் தேசியக் கொடியான புலிக்கொடியை ஏந்திய வண்ணம் வன்முறையில் ஈடுபட்டு நிகழ்சியை குழப்பக் கடும் பாடுபட்டார்கள். தமிழ் வணிகர்களை நேரிலும் தொலைவபேசி மூலமும் மிரட்டினார்கள். தெருவிழாவில் கலந்து கொள்வதில் இருந்து சிலரை பின்வாங்கச் செய்தார்கள். தெரு விழா நடந்த இடத்தைச் சுற்றி அச்சுறுத்தும் பாணியில் அநாகரிகமான முறையில், காட்டுமிராண்டிகள் போல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். பாடை கட்டி ஒப்பாரி வைத்து செத்தவீடு கொண்டாடினார்கள்.

கைகளில் புலிக் கொடியை ஏந்திய வண்ணம் நின்ற சிலர் கெட்ட வார்த்தைகளில் மேடையில் இருந்தவர்களைப் பார்த்துத் திட்டினார்கள். தமிழகத்தில் இருந்து வந்த பாடகர் சிறிநிவாசன் பாட வந்தபோது அவரை நோக்கி கூழ்முட்டைகள் வீசப்பட்டன. ஒலிபெருக்கியை ஓங்கி ஒலிக்க வைத்து அவரது இசை நிகழ்ச்சியை குழப்பினார்கள். நிகழ்ச்சி நடந்த பகுதிக்கு அத்துமீறி நுழைந்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். இந்தக் காடையர் கூட்டத்தின் வெறியாட்டத்தைக் கண்டு மக்கள் முகம் சுழித்ததை காணக் கூடியதாக இருந்தது.

ஒரு நிகழ்ச்சியைப் புறக்கணிக்கலாம். எதிர்த்துப் போராட்டம் செய்யலாம். அது மக்களது அடிப்படை உரிமைகள். சட்டத்தை கையில் எடுக்கும் உரிமை யாருக்கும் இல்லை. அப்படியான எதிர்ப்புப் போராட்டம் சட்டத்துக்கு உட்பட்டு நாகரிகமான முறையில் செய்யப்பட வேண்டும். எதிர்ப்போர் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ள வேண்டும். கண்ணியத்தைக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டு தெருவிழாவின் மேடை, ஒளி, ஒலி, அமைப்பு, LED Video Wall போன்ற ஒழுங்குகளைச் செய்யும் பணியை SV Media நிறுவனத்தின் ஊடக நிறுவனமான தமிழ் One தொலைக்காட்சிக்கு கனடிய தமிழர் பேரவையால் வழங்கப்பட்டது. SV Media நிறுவனமானது தமிழ் One தொலைக்காட்சி சேவையை நடத்தி வருவதுடன், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பிரமாண்ட நிகழ்ச்சிகளுக்கான தயாரிப்பு சேவையை (Sound, Light, LED Wall, Power) தொடங்கியிருந்தது. குறுகிய காலத்திலேயே கனடிய நிறுவனங்களுக்கு நிகரான வளர்ச்சியை SV Media அடைந்திருக்கின்றமைக்கு சான்றாக ரொறன்ரோவில் நடைபெறும் அனைத்து சமூகங்களினதும் முக்கிய நிகழ்வுகளுக்கான தயாரிப்பு சேவைகளை SV Media நிறுவனம் எல்லோரும் மெச்சத்தக்க வகையில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தங்களைத் தேசியவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் இந்தப் போலித் தேசியவாதிகள் அந்த நிறுவனத்தின் மீதும் கடுமையான அழுத்தத்தை கொடுத்தார்கள். கனடிய தமிழர் பேரவையோடு அந்த நிறுவனம் செய்து கொண்ட உடன்படிக்கையில் இருந்து பின்வாங்குமாறு நெருக்கினார்கள். பின்வாங்காவிட்டால் அதன் பின் விளைவுகளை சந்திக்க வேண்டி நேரிடும் என எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் 25 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை இந்தப் போலித் தேசியவாதிகள் தங்கள் எச்சரிக்கையை நடைமுறைப் படுத்தினார்கள். SV Media நிறுவனத்துக்குச் சொந்தமான தொலைக்காட்சியின் ஒளிபரப்பு வாகனம் தீக்கிரையாக்கப்பட்டது. இலங்கையை எரித்த அனுமான் போல தீவைத்துத் தகனம் செய்தார்கள். இதனால் அந்த நிறுவனத்தின் பல்லாயிரக் கணக்கான டொலர்கள் பெறுமதியான ஒலி, ஒளிப் பொருட்கள் எரிந்து சாம்பலாகின.

கடந்த நொவெம்பர் மாதம் 17 ஆம் நாள் கனடிய தமிழர் பேரவையின் அலுவலகம் நள்ளிரவில் முகமூடி அணிந்து கொண்டு சென்ற அனுமார்களினால் தீக்கிரை ஆக்கப்பட்டது. அதே அனுமார்கள்தான் இந்த SV Media நிறுவனத்திற்குச் சொந்தமான தமிழ் One தொலைக்காட்சி வாகனத்தையும் தகனம் செய்துள்ளார்கள் என ஐயப்படுகிறோம்.

இப்படியான வன்முறையை கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. காவல்துறை SV Media நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனத்தை தகனம் செய்தவர்களை கண்டு பிடித்து நீதிக்கு முன் நிறுத்த சகல நடவடிக்கைகளையும் துரிதகெதியில் எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அடுக்கிய கோடி பெறினும் குடிப்
பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (அதிகாரம் - 96 - குடிமை - குறள் 954)
- என்று உள்ளது.

## கியூபெக்கில்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடிய இயற்கை வள நிறுவனம் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

நேற்றைய தினம் அதிகாலை 5.43 மணியளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நில நடுக்கம் காரணமாக சேதங்கள் எதுவும் பதிவானதாக தகவல்கள் வெளியாகவில்லை.

கியூபெக் மாகாணத்தில் அதிகளவில் நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# பெல்கிராவியவில் நடந்த சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவில் பெல்கிராவிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

30 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேக நபர் அல்லது சந்தேக நபர்களைக் கண்டு பிடிப்பதற்காக தடயவியல் நிபுணர்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# றொறன்ரோவில் பொது இடத்தில் அநாகரிகமாக நடந்தவர் கைது!

கனடாவின் றொறன்ரோவில் பொது இடம் ஒன்றில் அநாகரிகமாக நடந்து கொண்டவர் எனக் கூறப்படும் 35 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹை பார்க் பகுதியில் அமைந்துள்ள பொது நீச்சல் குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீச்சல் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது இந்த நபர் அநாகரிகமாக நடந்து கொண்டார் என அங்கிருந்த பொதுமக்கள் குற்றம் சுமத்தி உள்ளனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்த நபரை பொலிஸார் கைது செய்து அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.






# றொறன்ரோ டவுன்டவுன் பகுதியில் கத்திக்குத்தில் இரண்டு பேர் காயம்

கனடாவின் றொறன்ரோ டவுன்டவுன் பகுதியில் ஹோட்டல் ஒன்றில் இரவில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் இவ்வாறு காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த இருவருக்கும் உயிராபத்து கிடையாது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டைய நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# மோட்டார் சைக்கிள்கள் அணியினருடன் அரை டிரக் நேரடி மோதல்; இருவர் பலி!

நெடுஞ்சாலை 2 இல் பல மோட்டார் சைக்கிள்கள், அரை டிரக் ஒன்றுடன் நேற்று முந்தினம் சனிக் கிழமை காலை மோதுண்ட ஒரு பயங்கரமான விபத்தில் தொடர்ந்து இரண்டு பேர் உயிரிழந்தனர்.

நண்பகலுக்கு சற்று முன், சக்கர் க்ரீக் ஃபர்ஸ்ட் நேஷன் மற்றும் டிரிஃ ப்ட்பைல் க்ரீ நேஷனுக்கு அருகா மையில் ஹை ப்ரேரிக்கு அருகில் ரேஞ்ச் ரோடு 143க்கு அருகில் விபத்து நடந்ததாக றோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸ்(RCMP )கூறியது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பலர் காயமடைந்துள்ளமையுடன் இருவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் டிரிஃப்ட்பைல் ஃபர்ஸ்ட் நேஷனைச் சேர்ந்த 38 வயதானவர். மற்றவர் 33 வயதான எட்மண்டன் குடியிருப்பா ளர்.

வெவ்வேறு அளவிலான காயங் களுடன் குறைந்தது ஆறு மோட்டார் சைக்கிளோட்டிகள் மருத்துவம னைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

முதற்கட்ட விசாரணையில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் பெரிய குழுவாக பயணித்த சமயம் எதிர்த் திசையில் வந்த அரை டிரக் வெள்ளைக் கோட்டைத் தாண்டி ஓரணியில் பயணித்த மோட்டார் சைக்கிள்களுடன் மோதியது எனப் பொலிஸ் கூறுகின்றது.

மோட்டார்சைக்கிள் கிளப் ஒன் றின் உறுப்பினர்கள் தொண்டு சவாரி யில் பயணித்த சமயம் இந்த விபத்து நேர்ந்ததாகத் தெரிகிறது.

ஞாயிற்றுக்கிழமை சமூக ஊட கங்களில் விபத்து பற்றி கிளப் தக வல் வெளியிட்டது. உயிரிழந்த இரண்டு மோட்டார் சைக்கிள் ஓட் டுநர்கள் ரெட்ரம் உறுப்பினர்கள் லாரன்ட் இசடோர் மற்றும் டைலர் டுபோஸ்கி என அடையாளம் காணப் பட்டனர்.





# கனடாவின் புதைபடிவ எரிபொருள் வெளியேற்றத்தை விட 2023 காட்டுத்தீ உமிழ்வுகள் நான்கு மடங்கு அதிகமானவை

2023 இல் கனடாவில் ஏற்பட்ட காட்டுத்தீயால் ஏற்பட்ட கிரக வெப்ப மயமாதல் உமிழ்வுகள் முந்தைய ஆண்டை விட நாட்டின் Fossil Fuel missions இனை நான்கு மடங்காக உயர்த்தியுள்ளது என சமீபத்திய நாஸா ஆய்வு தெரிவித்துள்ளது. மேலும் கனடாவில் 2023 மே முதல் செப்டம்பர் வரை ஏற்பட்ட காட்டுத் தீயை விட சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா மட்டுமே ஆண்டுக்கு அதிக கார்பனை வெளியிடுகின்றன என்று கூறுகின்றது.

அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகள் காடுகளின் கார்பனை உறிஞ்சும் திறனைக் கடுமையாகக் குறைக்கலாம் என்று California இல் உள்ள நாசாவின் Jet Propulsion ஆய்வகத்தின் காபன் சுற்று விஞ்ஞானி பைரன் கவலை தெரிவித்தார்.

கடுமையான வெப்பம் மற்றும் வறண்ட நிலைகள் கனடாவின் நான்கு சதவீத வனப்பகுதியில் எரியும் காட்டுத் தீயை இயக்க உதவியது. அத்தோடு 232,000 மக்களை வெளியேற்ற வழிவகுத்தது என்று ஆய்வு கூறுகிறது. காலநிலை மாதிரிகள்,அந்த நிலைமைகள் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சாதாரணமாகி, தீ செயல்பாடு அதிகரிக்க வழி வகுக்கும் என்று கணிக்கின்றன.

கனடாவின் காடுகள் நீண்ட காலமாக அவை வெளியிடுவதை விட அதிக கார்பனை உறிஞ்சி வருகின்றன. மேலும் உலகெங்கிலும் உள்ள காடுகள் மனிதனால் ஏற்படும் உமிழ்வுகளில் 25 சதவீதத்தை உறிஞ்சும் என்று கருதப்படுகிறது. இருப்பினும் அதிகரித்து வரும் காட்டுத்தீ கனேடிய காடுகளின் கார்பனை உறிஞ்சும் திறனைக் குறைக்கும் என்று ஆய்வு கூறுகின்றது.



# வெளிநாட்டு மாணவர்களின் உள்ளீர்ப்பு கனடியப் பல்கலைக்கழகங்களில் வீழ்ச்சி

கனடிய பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களை உள்ளீர்க்கும் நடவடிக்கையில் வீழ்ச்சியை பதிவாகியுள்ளது.

கனடிய மத்திய அரசாங்கம் வெளிநாட்டு மாணவர்கள் உள்ளீர்ப்பை வரையறுக்கும் வகையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன் அடிப்படையில் அனேகமான பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் உள்ளீர்ப்பு குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் வெளிநாட்டு மாணவர்களை உள்ளீர்ப்பது குறைக்கப்படும் எனக் குடிவரவு அமைச்சர் அறிவித்திருந்தார்.

வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

வீடமைப்பு, சுகாதாரம் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதில் நிலவும் நெருக்கடி நிலையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

அரசாங்கத்தின் புதிய கொள்கை காரணமாக வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் 35 வீத வீழ்ச்சி அடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்து இந்த எதிர்வு கூறல் வெளியிடப்பட்டுள்ளது. அரசாங்கம் எதிர்வு கூறியதை விடவும் மாற்றம் அதிகமானது என கனடிய பல்கலைக்கழகங்களின் தலைவர் கேப்ரியல் மில்லர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் எண்ணிக்கை வரையறையானமை மாணவர்கள் மத்தியில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# இலங்கை, இந்திய மாணவர்களுக்குக் கனடாவில் தரமான கல்வி, செலவுத் திறன் மிக்க பல்கலைகள்

வெளிநாட்டில் படிக்க விரும்பும் இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த மாணவர்களுக்கு, கல்விச் செலவை நிர்வகிப்பது ஒரு கடினமான பணியாக இருக்கும்.

உயர் கல்வித் தரங்கள் மற்றும் வரவேற்கத்தக்க சூழலுக்கு புகழ்பெற்ற கனடா, தரமான கல்வி மற்றும் செலவு-திறன் ஆகியவற்றை சரியான கலவையில் வழங்கும் பல நகரங்களைக் கொண்டுள்ளது.

உதாரணமாக, மாண்ட்ரீல் நகரம் QS World University Rankings 2024-இல் மிகவும் மலிவான நகரமாக பட்டியலில் 75 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த நகரம் அதன் பொருளாதார வாழ்க்கைச் செலவுகளுக்கு மட்டுமல்ல, அதன் மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களுக்கும் தனித்து நிற்கிறது.

2024-ஆம் ஆண்டில் இந்திய மற்றும் இலங்கை மாணவர்களுக்கான டொப் 5 மலிவான கனேடிய நகரங்கள் இதோ...

## 1.மொன்றியல், குபெக்



மொன்றியல், அதிக மாணவர்களுக்கான உயர்தர கல்வி மற்றும் வாழ்க்கை அனுபவத்தை வழங்குகிறது.

இங்கு, McGill பல்கலைக்கழகம், Université de Montréal, Concordia பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்கள் உள்ளன.

மொன்றியலில் ஓர் அறை வீட்டு வாடகை மாதத்திற்கு 1,300 முதல் 1,700 கனேடியன் டொலர்கள் வரை செலவாகும்.

## 2. ஷெர்ப்ரூக், குபெக்



மொன்றியலிலிருந்து 160 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஷெர்ப்ரூக், கல்வித் தரத்தை இழக்காமல் குறைந்த செலவைக் கொண்டுள்ளது.

Sherbrooke Univeesité de Sherbrooke மற்றும் Bishop's University போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் இங்குள்ளன.

இங்கு மாணவர்கள் மாதம் 800க் கனேடியன் டொலர்களுக்கு வீடு வாடகைக்கு எடுக்கமுடியும்.

## 3. ஒட்டாவா, ஒன்ராறியோ



கனடாவின் தலைநகர் ஒட்டாவா, உயர்தர கல்வி தரத்தை வழங்குவதோடு, மிதமான வாழ்க்கைச் செலவுகளையும் கொண்டுள்ளது.

தொடர்ச்சி▼

# இலங்கை, இந்திய மாணவர்களுக்குக் கனடாவில் தரமான கல்வி, செலவுத் திறன் மிக்க பல்கலைகள்

தொடர்ச்சி▲

ஒட்டாவா பல்கலைக்கழகம் மற்றும் கார்லேடன் பல்கலைக்கழகம் ஆகியவை ஒட்டாவாவில் உள்ள சிறந்த நிறுவனங்களில் சிலவாகும். அவற்றின் வலுவான கல்வித் திட்டங்களுக்கு அவை பெயர் பெற்றவை.

இங்கு மாதத்திற்கு CAD 1,200 கனேடியன் டொலர்களுக்கு வீடு வாடகைக்கு கிடைக்கிறது.

### 4.மொன்க்டன், நியூ பிரன்சுவிக்



மொன்க்டன் (Moncton) நகரத்தில், மான்க்டன் நியூ பிரன்சுவிக் பல்கலைக்கழகம் மற்றும் மான்க்டன் பல்கலைக்கழகம் போன்ற சிறந்த பல்கலைக் கழகங்கள் உள்ளன.

இங்கு ஒரு அறை வீட்டு வாடகை மாதம் 800 கனேடியன் டொலர்களுக்கு கிடைக்கின்றது.

### 5.வினிபெக், மானிடோபா



வினிபெக் நகரம் மாணவர்களுக்கு விலையுயர்ந்த வாழ்க்கையைத் தவிர்த்து தரமான கல்வி மற்றும் வாழ்வு அனுபவத்தை வழங்குகிறது.

மனிடோபா பல்கலைக்கழகம் மற்றும் வின்னிபெக் பல்கலைக்கழகம் ஆகியவை நகரத்தின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும், அவற்றின் வலுவான கல்வித் திட்டங்களுக்கு பெயர் பெற்றவை.

இங்கு மாத வாடகை 900 முதல் 1,200 கனேடியன் டொலர்கள் வரை உள்ளது.

இந்த நகரங்கள் இந்தியா, இலங்கை போன்ற பல வெளிநாட்டு மாணவர்களுக்கு உயர் தரமான கல்வியையும், குறைந்த செலவிலும் வாழ்க்கையை மேற்கொள்ள உதவுகின்றன.




# கடன் மீள்செலுத்துகைக் கொடுப்பனவு இளைய கனேடியர்களிடையே தாமதம்!

## வாழ்க்கைச் செலவு, வேலையின்மை காரணமாக

Equifax நடத்திய ஒரு கணக்கெடுப்பின்படி, வாழ்க்கைச் செலவுகள் மற்றும் வேலையின்மை ஆகியவை காரணமாக் இரண்டாவது காலாண்டில் இளைய கனடியர்களிடையே தாமதமான கடன் கொடுப்பனவுகள் அதிக விகிதத்திற்கு பங்களித்தன.

வாகனக் கடன்களுக்கான குற்ற விகிதங்கள் மற்றும் கடன் வரிகள் குறிப்பாக இளைய கனடியர்களிடையே அதிகமாக இருப்பதாக அறிக்கை கூறுகிறது. இது மக்கள் தொகை அடிப்படையில் எதிர்கொள்ளும் நிதி அழுத்தங்களைக் குறிக்கின்றது.

2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 26-35 வயதுடைய கனடியர்களிடையே தவறவிட்ட கடன் கொடுப்பனவுகளின் விகிதம் 1.99 சதவீதமாக இருந்ததாக Equifax கூறுகிறது. மேலும் இது முந்தைய ஆண்டை விட 21.6 சதவீதம் அதிகம். அத்தோடு நுகர்வோர் கடன் அளவுகள் 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இருந்து 4.2 சதவீதம் அதிகரித்து 2.5 ட்ரிலியன் டாலர்களாக உயர்ந்துள்ளது என்று அறிக்கை கூறுகிறது.

கனடாவின் வேலையின்மை விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஜூலை மாதத்தில் 6.4 சதவீதத்தை அது எட்டியுள்ளது. அதிக வட்டி விகிதங்கள் பொருளாதாரத்தை மெதுவாக்குகின்றன. தொடரும் பொருளாதார அழுத்தங்கள் பல இளைய கனேடியர்களை அவர்களது குடும்பங்களுடன் மீண்டும் வாழ அனுப்புகின்றன.